

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (24,09,2026) காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் சந்தித்து தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணை தலைவர் போஸ் வெங்கட் அவர்கள் ஏற்பாட்டில் தர்சினி கலைகூட நிர்வாகி தர்மலிங்கம் அவர்கள், தனது "தர்சினி கலை கூடம்" ஏற்பாட்டில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி தமிழ்நாடு முழுவதும் இருந்து ஆயிரக்கணக்கான ஓவியர்கள் வரைந்த கலைஞர் ஓவியங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூறு சிறந்த ஓவியங்களை தொகுத்து "கலைஞர் கண்ட கலைஞர்" என்ற தலைப்பிலான ஓவிய தொகுப்பினை வழங்கினார். அதுபோது, கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், செய்தி தொடர்பு குழு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தலைமை நிலைய செயலாளர்கள் பூச்சி முருகன், துறைமுகம் காஜா ஆகியோர் உடனிருந்தனர்

### தரக்குறைவாகப் பேசியதால் வாக்குவாதம்:

# கடலூர் மாநகராட்சி ஆணையரைக் கண்டித்து தர்ணா!

## மேயர் மற்றும் தி.மு.க. மாமன்ற உறுப்பினர்கள் வெளியேற்றம்!

கடலூர், செப்.25–

கடலூர் மாநகராட்சியில் வளர்ச்சிப் பணிகள் தொடர்பாக பேசச் சென்றபோது, கடலூர் மாநகராட்சி ஆணையர் தங்களை தரக்குறைவாகப் பேசியதாகக் கூறி, மேயர் சுந்தரிராஜா தலைமையில் திமுக மாமன்ற உறுப்பினர்கள் புதன்கிழமை தர்ணாவில் ஈடுபட்டனர். அவர்களை காவல்துறையினர் குண்டுகட்டாக தூக்கிச் சென்று அப்புறப்படுத்தினர்.

கடலூர் மாநகராட்சிக்குள்பட்ட 45 வார்டுகளிலும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில், நிறைவடைந்த சில பணிகள் இன்னும் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது. மேலும், மழைநீர் வடிகால் உள்ளிட்ட பணிகள் தொடர்பாகவும் புகார்கள் எழுந்துள்ளன.

இது தொடர்பாக மாநகராட்சி நிர்வாகத்திடம் முறையிடுவதற்காக மேயர் சுந்தரிராஜா தலைமையில் திமுக மாமன்ற உறுப்பினர்கள் புதன்கிழமை ஆணையர் கிஷண்குமாரைச் சந்தித்தனர். அப்போது, புகார்கள் குறித்து ஆணையர் முறையாகப் பதிலளிக்காததால், மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. தொடர்ந்து, அங்கு வந்த காவல்துறையினர் மேயர் உள்ளிட்டோரை சமாதானம் செய்து அறையை விட்டு வெளியே அழைத்து வந்தனர்.

தொடர்ந்து, மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், ஆணையர் தங்களை தரக்குறைவாகப் பேசியதாக குற்றஞ் சாட்டினர். மேலும், அவரைக் கண்டித்து மேயர் சுந்தரிராஜா தலைமையில் திமுக மாமன்ற உறுப்பினர்கள், மாநகரச் செயலர் கே.எஸ். ராஜா, முன்னாள் எம்எல்ஏ இள. புகழேந்தி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மாநகராட்சி அலுவலக நுழைவு வாயில் முன் அமர்ந்து தர்னாவில் ஈடுபட்டனர்.

தகவலறிந்து வந்த டிஎஸ்பி தமிழ் இனியன் தலைமையிலான காவல்துறையினர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில், உடன்பாடு ஏற்படாத நிலையில், திமுக மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆணையர் அறையை முற்றுகையிடச் சென்றனர்.

அவர்களை காவல்துறையினர் தடுத்து நிறுத்தியபோது, இரு தரப்பினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இதையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களை குண்டுகட்டாகத் தூக்கிய காவல்துறையினர் வாகனத்தில் ஏற்றி, தனியார் திருமண மண்டபத்துக்கு அழைத்துச் சென்றனர்.

பின்னர் நடைபெற்ற பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து, மேயர் சுந்தரிராஜா, திமுக மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் கடலூர் மாவட்ட காவல் அலுவலகத்துக்குச் சென்றனர். அங்கு, மாநகராட்சி ஆணையர் கிஷண்குமார் தங்களை தரக்குறைவாகப் பேசியதாகக் கூறி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விவேகானந்த சுக்லாவிடம் புகார் மனு அளித்தனர்.

மனுவைப் பெற்றுக்கொண்ட காவல் கண்காணிப்பாளர், சம்பவம் குறித்து மாநகராட்சி ஆணையர் கிஷண்குமாரை தொடர்புகொண்டு கேட்டறிந்தார். பின்னர், இந்த விவகாரம் தொடர்பாக மாவட்ட ஆட்சியருடன் ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்ததாக திமுக தரப்பில் கூறப்பட்டது.

### மதுராந்தகம் – தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தல் பணிகள்!

# கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு நிர்வாகிகள் அவசர ஆலோசனைக்கூட்டம்!

## செயலாளர் டாக்டர்.அ.சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை,செப்.25-

கழகத்தலைவர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி, கழக இளைஞரணிச் செயலாளர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நடைபெறவுள்ள மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தல் பணிகள் தொடர்பான கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் நிர்வாகிகள் அவசர ஆலோசனைக்கூட்டம் இன்று (25-09-2026-வெள்ளிக்கிழமை) மாலை 4:00 மணியளவில் தச்சூர் சீர்வாடி - ஷாலும் கம்யூனிட்டி சென்டரில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில, மாவட்ட, மாநகர, பகுதி மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து

# மதுராந்தகத்தில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## மல்லை சி.ஏ.சத்யா அறிவிப்பு!

மதுராந்தகம், செப். 25–

மதுராந்தகம் தொகுதி கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து நாளை (26.9.2026) திராவிட வெற்றிக் கழகம் சார்பில் மதுராந்தகம் தேரடி திடலில் பொதுக் கூட்டம் நடைபெறுகிறது என்று இக்கழகத்தின் தலைவர் மல்லை சி.ஏ.சத்யா அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

26/09/2026 சனிக்கிழமை அன்று பிற்பகல் 3 மணியளவில் மதுராந்தகம் தேரடித் திடலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர்



இ.பராந்தாமன் அவர்களை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரிக்கும் பிரச்சார பொதுக்கூட்டம் அவசியம் பங்கேற்று சிறப்பித்திட வேண்டுகின்றேன் .

அன்பின் தோழமைகளே நூற்றாண்டு கடந்த திராவிட இயக்கத்திற்கு இது ஒரு சவாலான காளம் கை விரித்து வந்த கயவர் நம்மிடையே பொய் விரித்து நம் புலன்கள் மறைத்து தமிழுக்கு விலங்கிட்டுத் தமிழகம் பற்றி நமக்குள்ள உரிமை தமக்கென்பார் எனில் வழி வழி வந்த உன் மறத்தனம் எங்கே மொழிப்பற்று எங்கே வையம் ஆண்ட வண்டமிழ் மரபே உன் கையிருப்பை காட்ட எழுந்து வா என்ற பாவேந்தர் பாரதிதாசனின் பாட்டு வரிகள்

திராவிட வெற்றிக் கழகத் தோழர்களே நாம் யார் என்பதை நிரூபிக்கும் வேலை சுமைகள் இருக்கலாம் ஆனாலும் சோர்ந்து போகாமல் கடமையாற்ற அருமையான சந்தர்ப்பம் வாய்த்து இருக்கிறது

இது போல் ஒரு துவக்கம் எப்போதும் இருந்து இருக்காது வாழ்வின் உன்னதமான மணித்துளிகளை கடக்க இருக்கின்றோம்

26/09/2026 சனிக்கிழமை மதுராந்தகம் தேரடித் திடலில் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரிக்கும் பிரச்சார பொதுக்கூட்டத்தில் எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்க புலியெனச் செயல் செய்யப் புறப்பட்டு வாரீர்!

இவ்வாறு மல்லை ஏ.சத்யா தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் திருமதி.சுகன்யாவை ஆதரித்து பிரச்சாரம் செய்துவரும் தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக செயலாளர் – முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் முன்னிலையில் கொளத்துப்பாளையம் பகுதியை சேர்ந்த த.வெ.க.வை சேர்ந்த இளைஞர்கள் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். உடன் தூத்துக்குடி மாநகர செயலாளர் எஸ். ஆர்.ஆனந்தசேகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.





நாள் : 25.09.2026 வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.00 மணி
இடம் : பிரசாத் கலர் லேப், சாலிகிராமம், வடபழனி, சென்னை

முன்னிலை :
திருமிகு. திருச்சி.N.சிவா M.P. அவர்கள்
தி.மு.க துணை பொதுச்செயலாளர்

மிசா வடுக்கள் தொகுப்பு நூல் வெளியீட்டாளர் :
ஆசிரியர் திரு. கி.வீரமணி அவர்கள்
தலைவர், திராவிடர் கழகம்

முதல் பிரதி பெற்றுக்கொள்பவர் :
திரு. கே.பாலகிருஷ்ணன் அவர்கள்
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி

தி மிசா மார்க் ஆவணப்படம் வெளியீடு :
திரு. என்.ராம் அவர்கள்
இந்து பத்திரிகை குழுமம்

சிறப்பு அழைப்பாளர்கள் :
திரு. சுப.வீரபாண்டியன் அவர்கள் திரு. தோழர் தியாகு அவர்கள்
திரு. T.K.S.இளங்கோவன் Ex.MP அவர்கள்
தி.மு.க செய்தி தொடர்பாளர்